**<u>கூடுதல் மாவட்ட நீதிமன்றம், சிவகங்கை.</u>**

**<u>OS.No. 18/2016</u>**

2022-ம் ஆண்டு ஜீலை மாதம் 11-ம் நாள் திங்கட்கிழமை வ.**சா.1**-ன் வாக்கு மூலம் (1969-ம் ஆண்டு 54-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) கிரேடு 3 பெஞ்ச் கிளார்க் திருமதி.கே.ஏழிசை என்பவரால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | அந்தோணியம்மாள் | **வட்டம்** | |
| **க.பெ** | ஜான்பீட்டர் | **சமயம்** | இந்து |
| **கிராமம்** | அரியனேந்தல் | **வயது** | 62 |

<u>முதல்விசாரணை:</u>

நான் வாதி. நான் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்திருக்கிறேன். அதில் உள்ள விவரங்களை நான்தான் வழக்கறிஞரிடம் தெரிவித்தேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். 1 முதல் 10 பிரதிவாதிகள் மற்றும் என்னுடைய உறவுமுறையை காட்ட வம்சாவழி ஜாபிதா தாக்கல் செய்கிறேன். மேற்படி வம்சாவழி ஜாபிதா அசல் வ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னுடைய குடும்ப அட்டை நகல் தாக்கல் செய்வது அசலுடன் ஒப்பீட்டு செய்யப்பட்டு வ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா 1 முதல் 3 லக்கச் சொத்துக்களுக்கு என் தகப்பனார் பெயரில் உள்ள 10(1) சிட்டா கணினி நகல் தாக்கல் செய்கிறேன். மேற்படி சிட்டா நகல் வ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா 6 முதல் 12 லக்கச் சொத்துக்களுக்கு என் தகப்பனார் பெயரில் உள்ள 10(1) சிட்டா கணினி நகல் தாக்கல் செய்கிறேன். மேற்படி சிட்டா நகல் வ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா 13 முதல் 18 லக்கச் சொத்துக்களுக்கு என் தகப்பனார் பெயரில் உள்ள 10(1) சிட்டா கணினி நகல் தாக்கல் செய்கிறேன். மேற்படி சிட்டா நகல் வ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா 4 மற்றும் 5 லக்கச் சொத்துக்களுக்கு 11ம் பிரதிவாதி பெயரில் உள்ள 10(1) சிட்டா கணினி நகல் தாக்கல் செய்கிறேன். மேற்படி சிட்டா நகல் வ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிராதுபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

<u>கு.விசாரணை:</u> வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.